## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 149/2022

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆர்.பிரபு | வயது | 36 |
| த.பெ.(அ)க.பெ. | ராமசந்திரன் | தொழில் | வேதியியல் முதுகலை ஆசிரியர் |
| ஊர் | திப்பம்பட்டி | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் திப்பம்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். நான் தனியார் பள்ளியில் வேதியியல் முதுகலை ஆசிரியராக பணிபுாிகிறேன். விபத்தில் இறந்துபோன வனரோஜா எனது அம்மா. 31.07.2021 அன்று மாலை 4.30 மணிக்கு திப்பம்பட்டி கிராமத்திலிருநது திருப்பத்தூர் வருவதற்காக என்னுடைய இருசக்கர வாகனம் டி,.என், 24 எஸ் 1251 யமஹா கிரக்ஸ் வாகனத்தில் எனது அம்மாவை பின்புறம் உட்கார வைத்து சேலம் டு திருப்பத்தூர் சாலையில் வந்து கொண்டிருந்தேன். நான் அப்போது 5.45 மணியளவில் மேற்படி சாலையில் கொரட்டி அருகே இடதுபுற ஓரமாக திருப்பத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பின்னால் அதே சாலையில் டி.என், 83 ஆர் 8184 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் ஸ்கூட்டி வாகனத்தை ஆஜர் எதிரி ராஜா அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து எங்களுக்கு பின்னால் என்னுடைய இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். அதில் நானும் எனது அம்மாவும் கீழே விழுந்து எனக்கு வலது காலில் லேசான காயமும் எனது அம்மாவிற்கு தலையின் பின்புறம் பலத்த காயமும் ஏற்பட்டுவிட்டது.

(2) விபத்து நடந்த இடத்திலேயே ஒரு ஆம்னி வேன் நின்று கொண்டிருந்தது. அவசர உதவியாக அவர்களிடம் கேட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது அம்மாவை அழைத்து வந்தோம். என் அம்மாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேற்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக 108 ஆம்புலன்ஸ் முலம்

தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சென்று பாிசோதித்து பார்த்ததில் எனது அம்மா ஏற்கனவே இறந்துவிட்டதாக பரிசோதித்த மருத்துவர் சொன்னார். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் எனது அம்மா முதலுதவி சிகிச்சையில் இருந்த சமயம் போலீஸார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள். நான் அவர்களிடம் வாக்குமுலம் கொடுத்தேன். அதனை பதிவு செய்து கொண்டார்கள். அதில் கையொப்பம் போட்டேன். புகார் வாக்குமுலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமுலம் அ.சா.ஆ 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது).** போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி.

(1) நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதை போலீஸார் சொல்லி கொடுத்தப்படி சொன்னேன் என்றால் இல்லை, நானே தான் கூறுகிறேன். நான் மேற்படி கூறிய சங்கதியை தான் என்னுடைய புகாரிலும் போலீஸார் வாக்குமுலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தில் எனக்கு லேசான காயம் என்பதால் சுயநினைவோடு தான் இருந்தேன் என்றால் சரிதான், ஆனால் விபத்து ஏற்பட்டதால் பதற்றத்தோடு இருந்தேன். மேற்படி அடிப்பட்டவுடன் நானும் எனது அம்மா, எதிரியும் அங்கிருந்த ஆம்னி வண்டியில் மருத்துவமனைக்கு சென்றோம்.

(2) இதைதான் போலீஸார் சொல்லியிருந்தேனா என்றால் அதைதான் கூறியிருந்தேன். அதைதான் போலீஸாரும் வழக்காக பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை போட்டார்களா என்றால் இல்லை ஆரம்பத்தில் முதல் தகவல் அறிக்கையில் அந்த வழியாக சென்ற பல்சர் வாகனம் ஸ்கூட்டி மீது மோதி அந்த ஸ்கூட்டி என் மீது மோதியதாக பதிவு செய்யப்பட்டிருந்தது ஆனால் அது தவறானது என பின்னர் திருத்தப்பட்டது. அ.சா.ஆ 1 புகார் வாக்குமுலத்தில் கையெழுத்து செய்தேன் ஆனால் அதில் நான் கூறிய சங்கதிகள் இல்லை, அதனால் மீண்டும் மற்றொரு புகார் கொடுத்து அதன்பேரில் போலீஸார் விசாரணை செய்து அறிக்கை சமர்பித்தார்கள். நான் அப்படி ஒரு புகாரை மீண்டும் கொடுக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(3) அந்த புகாரை போலீஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை ஆனால் நான் கொடுத்திருந்தேன். விபத்து நடந்த போது பதற்றமாக இருந்ததால் தெரியாது என்றால் இல்லை எனக்கு தெரியும். என்னுடைய புகார் வாக்குமுலத்திலும் போலீஸ் விசாரணையிலும் என்

வண்டிக்கு முன்பு ஸ்கூட்டி சென்று கொண்டிருந்தது என்றும், அடுத்து எனது இருசக்கர வாகனம் சென்றது என்றும், பின்னர் பல்சர்வாகனம் வந்து என் வண்டியில் மோதிவிட்டு சென்றுவிட்டார் என்று கூறியிருந்தேன் என்றால் இல்லை அது தவறாக எழுதப்பட்டுவிட்டது, நான் தற்போது சாட்சியம் அளித்தது தான் உண்மை.

(4) என் அம்மாவிற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி என்னை இடித்த பல்சர் யார் என்ற தெரியாததால் அதே சம்பவத்தில் அடிப்பட்டு பாதிக்கப்பட்ட எதிரி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. வழக்கிற்காக நான் மாற்றி முன்னுக்கு பின் முரணாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் மேற்படி பல்சர் ஓட்டி வந்த நபர் ஏற்படுத்திய விபத்தை காப்பீடு பெறும் பொருட்டு எதிரியை காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் நான் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றச்செயலுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.
ம.வி. இல்லை.

**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 149/2022</u>**

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகரன் | வயது | 34 |
| த.பெ.(அ)க.பெ. | நீலன் | தொழில் | ஸ்டுடியோ |
| ஊர் | பாவக்கல் | சமயம் | |
| வட்டம் | ஊத்தங்கரை | சாதி | |
| மாவட்டம் | கிருஷ்ணகிரி | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் பாவக்கல் கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியம்மா மகன், சகலை உறவுமுறை. விபத்தில் இறந்துபோன வனரோஜா எனது பெரியம்மா. 31.07.2021 அன்று மாலை ஊத்தங்கரைக்கு ஒரு வேலையாக வந்திருந்தேன். அ.சா.1 எனக்கு போன் செய்து திருப்பத்தூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் தனது அம்மாவுடன் சென்று கொண்டிருக்கும்போது மற்றொரு இருசக்கர வாகனம் மோதி சாலை விபத்து நடந்ததாக கூறினார். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். உடனடியாக நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். எனது பெரியம்மாவின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி.

சம்பவத்தை பற்றி நேரடையாக தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று நேரடையாக தெரியாது என்றால் சரிதான், விசாரித்து தெரிந்து கொண்டேன். விபத்தில் இறந்துபோன நபர் பெரியம்மா. என்னுடைய பெரியம்மா மகன் மற்றொரு நீதிமன்றத்தில் நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

ம.வி. இல்லை